புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 166 | 21-12-2025 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 166 | 21-12-2025 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy



முதலமைச்சர் முக.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த நலம் காக்கும் ஸ்டாலின் மக்கள் நல மருத்துவ முகாம்,சேலம் மேற்கு மாவட்டம்,எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நங்கவள்ளி மத்திய ஒன்றியம்ரு வனவாசி பகுதியில் நடைபெற்றது.இம்முகாமில் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களது உடல்நிலை பரிசோதனை செய்து கொண்டதை நேரில் சென்று பார்வையிட்ட சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டிஎம்.செல்வகணபதி.மேலும் மருத்துவ பணியாளர்கள் வழங்கிய அர்ப்பணிப்பு சேவைகளை பாராட்டி,அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவித்தார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அறிவிப்பு

## வாக்காளர் பட்டியல் குறித்து முக்கிய ஆலோசனை!

சென்னை: டிச.21–

காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று ( டிச.21 ) திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். இந்தக் கூட்டம் வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. தமிழகத்தில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தொடர்ந்து வெளியிடப்பட்ட அந்த வரைவு வாக்காளர் பட்டியலில் 97.37 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தது. இதனால், கடந்த அக் .27ம் தேதி நிலவரப்படி, 6.41 கோடி வாக்காளர்கள் இருந்த நிலையில், தற்போது 5.44 கோடி வாக்காளர்கள் இருப்பதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

இந்நிலையில், மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து துரைமுருகன் வெளியிட்ட அறிக்கையில், "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று மாலை 6 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது, மாவட்டக் கழக செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். மேலும், இந்தக் கூட்டம் வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

97 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதற்கு பல்வேறு கட்சிகளும் கண்டனம் தெரிவித்துவரும் சூழலில், வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து நடைபெறும் இக்கூட்டம் கவனம் பெறுகிறது.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்ன் பொறியாளர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல்நிலை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# பரபரப்பாகும் அரசியல் களம்.. த.வெ.க. தலைமையில் கூட்டணி அமைக்க தயாராகும் விஜய்

"சென்னை, டிச.21–

சட்டசபை தேர்தலை சந்திக்க முழு வீச்சில் த.வெ.க. தயாராகி வருகிறது. தற்போதைய சூழ்நிலையில் 234 தொகுதிக்கும் தொகுதிக்கு 3 வேட்பாளர்கள் கொண்ட பட்டியலை விஜய் தயார் செய்து வைத்துள்ளார். இதில், மாவட்ட செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், பெண்கள், பிரபலங்கள் இடம் பெற்றுள்ளனர். ஈரோடு மக்கள் சந்திப்பு பயணத்திற்கு பிறகு புத்துணர்ச்சியாக காணப்படும் விஜய், தொடர்ந்து சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள இருக்கிறார். இதற்கான பணிகளை த.வெ.க. நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் மேற்கொண்டுள்ளார். ஜெயலலிதா பாணியில் விஜய்க்கும் அவர் பயண திட்டத்தை வகுத்து வருகிறார். இதற்கிடையே, த.வெ.க. தலைமையில் கூட்டணி அமைக்கவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான பணிகளை கட்சியின் தலைவர் விஜய் முடுக்கி விட்டுள்ளார். த.வெ.க. கூட்டணிக்கு கட்சிகளை அழைத்து வரவும், அவர்களிடம் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவும் குழு அமைக்கப்பட உள்ளது. இந்த குழுவில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா ஆகியோர் இடம் பெற உள்ளனர். 50 ஆண்டுகால அரசியல் அனுபவம் கொண்ட செங்கோட்டையனை கூட்டணி அமைப்பதற்கான குழு தலைவராக அமர்த்துவதன் மூலம் மற்ற கட்சி தலைவர்களை எளிதாக அணுக முடியும் என்று த.வெ.க. நம்புகிறது. எனவே விரைவில் இதற்கான அறிவிப்பை த.வெ.க. வெளியிட இருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில் எந்த அணியிலும் இல்லாத தே.மு.தி.க., பா.ம.க., அ.ம.மு.க., புதிய தமிழகம் ஆகிய கட்சிகளிடம் செங்கோட்டையன் தலைமையிலான குழு நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. ஜனவரிக்குள் கூட்டணி தொடர்பான நல்ல முடிவு எட்ட த.வெ.க. தலைமை வியூகம் அமைத்து செயல்பட்டு வருகிறது. கூட்டணியில் சேரும் கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளை தவிர மற்ற தொகுதிகளில் த.வெ.க. வேட்பாளர்களை உடனடியாக அறிவிக்கவும் த.வெ.க. திட்டமிட்டுள்ளது. வரும் 24ந் தேதி கட்சிக்கு புதிய சின்னம் (விசில் அல்லது மோதிரம்) கிடைத்து விடும் என்பதால் த.வெ.க. தேர்தல் தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிட திட்டமிட்டுள்ளது.",

# வரைவு வாக்காளர் பட்டியல்:

## திமுகவினருக்கு அமைச்சர் அறிவுறுத்தல்




கள்ளக்குறிச்சி டிச 21

வரைவு வாக்காளர் பட்டியலில் திமுக உறுப்பினர்கள், ஆதவராளர்களின் பெயர்கள் விடுபட்டிருந்தால், மீண்டும் அவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சியினரிடம் மாநில பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிறுத்தினார்.

திமுக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டம் சார்பில் செயற்குழுக் கூட்டம் தியாகதுருகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தெற்கு மாவட்டச் செயலரும், ரிஷிவந்தியம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான க.கார்த்திகேயன் தலைமை வகித்தார். வடக்கு மாவட்டச் செயலரும், சங்கராபுரம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான தா.உதயசூரியன், உளுந்தூர்பேட்டை தொகுதி எம்.எல்.ஏ. ஏ.ஜெ.மணிக்கண்ணன், மாநில மகளிரணி துணைச் செயலர் அங்கையற்கண்ணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு பேசியதாவது:

வரைவு வாக்காளர் பட்டியலில் திமுக உறுப்பினர்கள், ஆதவராளர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளதா என்பதை கவனமாக பார்க்க வேண்டும். ஏதேனும் பெயர்கள் விடுபட்டிருந்தால், மீண்டும் அவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டட திறப்பு விழாவுக்கு வரவுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பளிக்க வேண்டும். முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி உருவச்சிலை திறப்பதற்கான முன்னேற்பாடு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் புவனேஸ்வரி பெருமாள், சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர்கள் பெருநற்கிள்ளி, தாமரைச்செல்வன், அன்பழகன், ஸ்ரீதர், தலைமை பொதுக்குழு உறுப்பினர் மணிமாறன், தெற்கு மாவட்ட அவைத் தலைவர் ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். முடிவில் தெற்கு மாவட்ட துணை செயலாளர் காமராஜ் நன்றி கூறினார்.

# தேர்தல் ஆணையம் சுதந்திர அரசியலமைப்பு அமைப்பாக செயல்படாமல் மத்திய பாஜக அரசுடன் சேர்ந்து வாக்குரிமைப் பறிப்புக்கு உதவி செய்து தேர்தல் முடிவுகளை கையாண்டு ஆட்சியைப் பிடிக்க அரசு இயந்திரத்தை தவறாகப் பயன்படுத்துகிறது என எஸ்டிபிஐ கட்சி விமர்சனம்!!

கோவைடிச:21

குனியமுத்தூர் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் எஸ்டிபிஐ கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் டிசம்பர் 17 மற்றும் 18ம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரங்களை ஆய்வு செய்து, ஜனநாயகம், அரசியலமைப்பு ஆட்சி மற்றும் குடிமக்கள் உரிமைகளுக்கு கடும் அச்சுறுத்தலாக உள்ள பிரச்சினைகள் பற்றி ஆழமாக விவாதிக்கப்பட்டது.




அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய எஸ்டிபிஐ கட்சியின் தேசிய துணைத் தலைவர் ஷஃபிக் அஹமது:

பல மாநிலங்களில் உண்மையான வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து திட்டமிட்டு நீக்கும் முயற்சியாக உள்ள சிறப்பு தீவிர திருத்தப் பணி (Special Intensive Revision - SIR) யை எஸ்டிபிஐ கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

தேர்தல் ஆணையம் சுதந்திர அரசியலமைப்பு அமைப்பாக செயல்படாமல் மத்திய பாஜக அரசுடன் சேர்ந்து பெருமளவிலான வாக்குரிமைப் பறிப்புக்கு உதவி செய்து தேர்தல் முடிவுகளை கையாண்டு ஆட்சியைப் பிடிக்க அரசு இயந்திரத்தை தவறாகப் பயன்படுத்து கிறது என்று எஸ்டிபிஐ கட்சி குற்றம் சாட்டியது.

அதே போல மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை (விநிழிஸிணிநிகி) விக்சித் பாரத்கேரண்டி ஃபார் ரோஸ்கார் அண்ட் ஆஜீவிகா மிஷன் கிராமின் என மாற்றியமைத்ததை எஸ்டிபிஐ தேசிய செயற்குழு கண்டிக்கிறது. இது பாஜகவின் சித்தாந்த சகிப்பின்மை மற்றும் மகாத்மா காந்தியின் பங்களிப்பை மறுக்கும் போக்கை வெளிப்படுத்துவதாக குற்றம்சாட்டு.

இந்திய சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் பிரச்சினை குறித்து எஸ்டிபிஐ தேசிய செயற்குழு கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு எதிர்க்கருத்து உடையோர், செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், எதிர்க்கட்சியினர் கொடூரச் சட்டங்களின் கீழ் இலக்கு வைக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர்.இது இந்திய ஜனநாயகம் அதிகாரவாதத்தின் பிடியில் சிக்கியுள்ளதை காட்டுவதாக உள்ளது.

எஸ்டிபிஐ கட்சியின் தேசியத் தலைவர் எம்.கே. பைஸி போலியான மற்றும் தீங்கிழைக்கும் குற்றச்சாட்டுகளின் கீழ் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டிருப்பது அரசியல் பழிவாங்கலின் தெளிவானதாவும் இந்த கொடூரமான அநீதியான ஆட்சிக்கு எதிராக மக்கள் அச்சமின்றி ஜனநாயகப் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்று எஸ்டிபிஐ செயற்குழு வேண்டு கோள் விடுக்கிறது.

எதிர் வரும் கேரளா, தமிழ்நாடு,மேற்கு வங்காள சட்டமன்றத் தேர்தல்களில் எஸ்டிபிஐ கட்சி போட்டியிடும் என்றும் அதற்கான தேர்தல் தயாரிப்புகள் நடைபெற்று வருகிறது.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தேசிய துணைத் தலைவர் வழக்கறிஞர் ஷர்புதீன் அஹமது, பொதுச் செயலாளர்கள் முகமது இல்யாஸ் தும்பே, அப்துல் மஜீத் பைஸி, யாஸ்மின் ஃபரூக்கி, சீதாராம் கோய்வால், முகமது அஷ்ரப், தேசிய செயலாளர்கள் அல்போன்ஸ் ஃப்ரான்கோ, ரியாஸ் பாரங்கிபேட், தைஜூல் இஸ்லாம், அப்துல் சத்தார், பைஸல் இஸ்ஸூதீன், ரூனா லைலா, தேசிய பொருளாளர் அப்துல் ரவூஃப், தமிழ்நாடு மாநிலத் தலைவர் நெல்லை முபாரக், மாநில பொருளாளர் கோவை முஸ்தபா, கோவை மத்திய மாவட்ட தலைவர் இஷாக், மாவட்ட துணைத் தலைவர் ரஹீம், மாவட்ட பொதுச்செயலாளர் சாகுல் ஹமீது,அமைப்பு பொதுச்செயலாளர் இப்ராஹிம் பாதுஷா உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் திருச்சியில் 2 நாள் சிறப்பு முகாம்

## பயன்படுத்திக் கொள்ள கலெக்டர் வே.சரவணன் வேண்டுகோள்!

திருச்சி டிச 21

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 2026ம் ஆண்டு ஜனவரி 1ந் தேதியை தகுதி ஏற்பு நாளாக கொண்டு தகுதியுள்ள நபர்கள் எவரும் வாக்காளர் பட்டியலில் விடுபடவில்லை என்பதையும், தகுதியற்ற நபர்கள் யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு திருச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட 9 சட்டமன்ற தொகுதி களிலும் (டிச.20) மற்றும்21ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தம் தொடர்பாக சிறப்பு முகாம்கள் நடைபெற இருக்கின்றன. காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடக்கும் இந்த முகாம்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் திருத்தங்கள் அல்லது இடமாற்றம் செய்யவோ விரும்பும் வாக்காளர் பங்கேற்று பயனடையலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முகவரி சான்றாக கீழ்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை அளிக்கலாம். ஆதார்கார்டு, முகவரிக்கான குடிநீர், மின்சாரம், கியாஸ் இணைப்பு ரசீது (குறைந்தது 1 வருடத்துக்காவது), தேசிய மயமாக்கப்பட்ட அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி, அஞ்சல் அலுவலகத்தின் தற்போதைய கணக்கு புத்தகம், கடவுச்சீட்டு, விவசாயி புத்தகம் உள்பட வருவாய்த்துறைகளின் நிலஉரிமைப் பதிவுகள், பதிவு செய்யப்பட்ட வாடகை குத்தகை பத்திரம் (குத்தகை தாரராக இருந்தால்), பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரம் (சொந்த வீடு எனில்) ஏதேனும் ஒன்றை அளிக்கலாம்.

வயது சான்றாக தகுதிவாய்ந்த உள்ளாட்சி அமைப்பு அல்லது நகராட்சி அதிகாரி அல்லது பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் வழங்கிய பிறப்பு சான்றிதழ், ஆதார்கார்டு, பான்கார்டு, ஓட்டுனர் உரிமம், சி.பி.எஸ்.சி. அல்லது ஐ.சி.எஸ்.சி. அல்லது மாநில கல்வி வாரியங்களால் வழங்கப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. அல்லது பிளஸ் 2 வகுப்பு சான்றிதழ்கள் (அதில் பிறந்த தேதி இருந்தால்), இந்திய கடவுச்சீட்டு, https://voters.eci.gov.in என்ற இணையதள முகவரி மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தான் வசிக்கும் இருப்பிடத்தை ஒரு தொகுதியில் இருந்து வேறு தொகுதிக்கு மாற்றினாலோ அல்லது தற்போது வசிக்கும் தொகுதிக்குள்ளேயே இடம் பெயர்ந்தாலோ அல்லது வாக்காளர்களின் விவரங்களில் திருத்தம் செய்ய வேண்டியிருந்தாலோ , இடம் பெயர்தல், திருத்தம், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தொலைந்து போதல் ஆகிய காரணங்களுக்காக மாற்று புகைப்பட அடையாள அட்டை பெற வேண்டி இருந்தாலோ படிவம் 8ல் விண்ணப்பிக்க வேண்டும். மேற்கண்ட படிவங்களுடன் கண்டிப்பாக உறுதிமொழி படிவத்தை பூர்த்தி செய்து அளிக்க வேண்டும். வருவது தேர்தல் ஆண்டு என்பதால் பொதுமக்கள் இந்த சிறப்பு முகாமை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தம் செய்து கொள்ளலாம் என திருச்சி மாவட்ட ஆட்சி தலைவர் சரவணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.




திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளின் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டார். இந்நிகழ்வில் முசிறி சார் ஆட்சியர் செல்வி. சுஷ்ரீ சுவாங்கி குந்தியா, மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி, மாவட்ட வருவாய் அலுவலர்/ ஆவின் பொது மேலாளர் முத்துமாரி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் தேசிய மின் சிக்கன வாரவிழா முன்னிட்டு மின்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கோட்ட செயற்பொறியாளர் சரவண தங்கம் தலைமை தாங்கினார். உதவி செயற்பொறியாளர்கள் நாராயணன், சசிகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக,ஆரணி எம்பி எம்.எஸ்.தரணிவேந்தன் பங்கேற்று விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும் இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் ஜலால், துணைத் தலைவர் அன்னை சீனிவாசன், திமுக கழக நகர செயலாளர் தயாளன்,ஒன்றிய செயலாளர் ஆரியாத்தூர் பெருமாள் உள்ளிட்ட தனியார் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். மேலும் மின் சிக்கனம் தேவை இக்கணம் உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை கையில் ஏந்தியவாறு விழிப்புணர்வு ஊர்வலமானது கோட்டை மூலை பகுதியில் இருந்து பழைய பேருந்து நிலையம் வழியாக சென்றது. பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களும் விநியோகம் செய்யப்பட்டது.

# நாயுடுமங்கலம் ஏரிக்கரையில் பனை விதைகள் நடும் விழா: இளைஞர் திறன் மேம்பாட்டுச் சங்கம் முன்னெடுப்பு




திருவண்ணாமலை இளைஞர் திறன் மேம்பாட்டுச் சங்கம் (Tiruvannamalai Youth Skill Development Society) சார்பில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் “இன்றைய விதைப்பு, நாளைய பாதுகாப்பு” என்ற முழக்கத்துடன் பனை விதைகள் நடும் நிகழ்வு இன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வு விவரங்கள்: (20/12/2025) காலை 8:00 மணியளவில் நாயுடுமங்கலம் ஏரிக்கரைப் பகுதியில் இந்த மரம் நடுதல் மற்றும் விதைப்புப் பணி நடைபெற்றது. பனை மரம் தமிழர்களின் வாழ்வோடும், நிலத்தோடும் ஒன்றிணைந்த மரம் என்பதையும், அவை நூற்றாண்டுகள் கடந்து வாழக்கூடியவை என்பதையும் வலியுறுத்தி இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

பங்கேற்பாளர்கள்: இந்த நிகழ்வில் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் முன்னிலை வகித்து, பனை விதைகளை நட்டு வைத்தனர். குறிப்பாக: வெங்கடேசன், புருஷோத்தமன், தனசேகரன்,ராஜா ஆகியோர் கலந்து கொண்டு, பனை மரத்தின் முக்கியத்துவம் குறித்தும், ஒரு தலைமுறை நடும் பனை மரம் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் பயன் தரும் என்பது குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்தத் திட்டத்தின் மூலம் ஏரிக்கரையின் பலம் பாதுகாக்கப்படுவதோடு, இயற்கை சமநிலையும் பேணப்படும் எனச் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# வரும் 21ஆம் தேதி போலியோ சொட்டு மருந்து முகாம்.

இந்த ஆண்டு, வரும் 21.12.2025 அன்று புதுச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் காலை 7 மணி முதல் மதியம் 3 மணி வரை ஐந்து (5) வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ மருந்து சொட்டு மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த 74,698 குழந்தைகளும் பயனடைவர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கிராமம் மற்றும் நகரப்புறங்களில் 425 முகாம்களிலும், பொதுமக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களான பேருந்து நிலையம், ரயில்வே நிலையம், பூங்காக்கள், கோவில்கள் மற்றும் வணிக வளாகங்களில் 31 இடங்களிலும் சொட்டு மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், உடல் ஊனத்தை உண்டாக்கக்கூடிய போலியோ நோயிலிருந்து தங்கள் குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ள இந்த சிறப்பு முகாம்களை அணுகி பயனடையுமாறு சுகாதாரத்துறை கேட்டுக்கொள்கிறது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் செயல்படும் அக்மார்க் ஆய்வகம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருக்காட்சி அரங்கினை பார்வையிட்டார்.

# சேலத்தில் கணவரைக் கொன்ற வழக்கு மனைவி,கள்ளக்காதலனுக்கு ஆயுள் சிறை.

கணவரைக் கொலை செய்த வழக்கில் மனைவி,அவரது கள்ளக்காதலனுக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்து சேலம் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சேலம் அருகே உள்ள கருப்பூர் உப்புகிணறு பகுதியைச் சேர்ந்தவர் செல்வக்குமார் (28), தனியார் கிரானைட் நிறுவனதொழிலாளி. இவருக்கு மனைவி ஐஸ்வர்யா (26), 2 மகள்கள் உள்ளனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதி செல்வக்குமார் திடீரென காணவில்லை. இதுகுறித்து சூரமங்கலம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்த நிலையில், அதே மாதம் 18 ஆம் தேதி உப்புகிணறு பகுதியில் உள்ள ஒரு கிணற்றில் செல்வக்குமார் உடல் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இதுகுறித்து போலீஸார் நடத்திய விசாரணையில், ஐஸ்வர்யா தனது கள்ளக்காதலனான மெக்கானிக் ரவி (28) என்பவருடன் சேர்ந்து செல்வக்குமாரை தோசைக்கல்லால் தாக்கி கொலைசெய்து கிணற்றுக்குள் வீசியது தெரியவந்தது.

இதையடுத்து அவர்களை போலீஸார் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை சேலம் இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வழக்கு விசாரணை முடிந்த நிலையில் தீர்ப்பு வெளியானது.இதில் செல்வக்குமாரைக் கொலை செய்த குற்றத்துக்காக ஐஸ்வர்யா,ரவிக்கு ஆயுள் சிறைத் தண்டனையும், தலா ரூ.15 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி எழில்வேலவன் தீர்ப்பளித்தார்.

# புதுச்சேரியில் குற்றங்களை தடுக்க சிசிடிவி கேமராக்கள் வழங்க முன்வந்த லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின்



புதுச்சேரி: டிச. 21–

புதுச்சேரி நகரில் அதிகரித்து வரும் குற்றச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும்,பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சிசிடிவி கேமராக்களை வழங்கத் தயாராக இருப்பதாக லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, உருளையன்பேட்டை பகுதியில் உள்ள முதுநிலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில், சட்டம் ஒழுங்கு முதுநிலை காவல் கண்காணிப்பாளர் (SSP) திரு. கலைவாணன் அவர்களை லட்சிய ஜனநாயக கட்சியினர் நேரில் சந்தித்தனர்.

நகரின் முக்கியப் பகுதிகளில் குற்றங்களைத் தடுக்கவும், கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும் சிசிடிவி கேமராக்களைத் தங்கள் தரப்பிலிருந்து வழங்கத் தயாராக இருப்பதாகவும், இதற்கான முறையான அனுமதியைக் காவல் துறை வழங்க வேண்டும் என்றும் கோரி அவரிடம் கடிதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது,லட்சிய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் பிரபாகரன், மண்டல பொதுச் செயலாளர்கள் முனைவர் கண்ணபிரான், சுரேஷ் மற்றும் விஜய்ராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர். பொது மக்களின் பாதுகாப்பு நலன் கருதி எடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சி சமூக ஆர்வலர் களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது

# தமிழ் ஆட்சிமொழி சட்ட வார விழிப்புணர்வுப் பேரணி



கள்ளக்குறிச்சி டிச 21

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் ஆட்சிமொழி சட்ட வார விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் டிசம்பர் 17ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரையிலான 7 நாள்கள் ஆட்சிமொழி சட்ட வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த வகையில், ஆட்சிமொழி சட்ட வார விழிப்புணர்வுப் பேரணி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து தொடங்கிவைக்கப்பட்டு, முக்கிய பகுதிகளில் சென்று நிறைவடைந்தது. இப்பேரணியில் பங்கேற்றோர் ஆட்சிமொழி தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறும், முழக்கமிட்டவாறும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

ஆட்சிமொழி சட்ட வாரத்தில் ஆட்சிமொழிப் பட்டிமன்றம், வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகை அமைக்க வலியுறுத்தி கலந்தாய்வுக் கூட்டம், அரசுப் பணியாளர்களுக்கான ஆட்சிமொழி ஆய்வு, குறைகளைவு நடவடிக்கைகளும், மொழிப் பயிற்சி, மொழி பெயர்ப்பும் கலைச் சொல்லாக்கமும், கணினித் தமிழ் விழிப்புணர்வு கருத்தரங்கம், தமிழில் வரைவுகள் மற்றும் குறிப்புகள் எழுதுவதற்கான பயிற்சி வகுப்பு, ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்தார்.

பேரணியில் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) ரா.சிவசங்கரி மற்றும் தமிழ் அமைப்புகள், தமிழறிஞர்கள், கள்ளக்குறிச்சி அரசு கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், வணிகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பேரணியின் முன்பாக சிலம்பாட்டம் உள்ளிட்ட கலைகளை நிகழ்த்தியவாறு கலைஞர்கள் பங்கேற்றனர்.

# திருச்சி ஸ்ரீரங்கம் யாத்ரி நிவாஸில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் விஷமருந்தி தற்கொலை

திருச்சி டிச 21:

திருச்சி மாநகர் ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோயிலுக்கு சொந்தமாக பஞ்சகரை பகுதியில் யாத்ரி நிவாஸ் என்கிற பெயரில் தங்கும் விடுதி செயல்படுகிறது. வெளி மாவட்டம் வெளி மாநிலங்களில் இருந்து ஸ்ரீரங்கம் உள்ளிட்ட திருச்சியில் உள்ள கோவிலுக்கு தரிசனம் செய்ய வருபவர்கள் தங்கி செல்ல வசதியாக அது செயல்படுகிறது.



இந்த நிலையில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தில்லைஸ்தானம் பகுதியை சேர்ந்த சாமிநாதன்(67), அவரது மனைவி செண்பகவல்லி(65) மற்றும் மகள்கள் பவானி(42), ஜீவா(37) ஆகியோர் கடந்த 10 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை யாத்திரி நிவாஸில் 710 வது அறையில் தங்க முன்பதிவு செய்திருந்தனர். 14 ஆம் தேதி அன்று மேலும் இரண்டு நாட்கள் தங்க அனுமதி கேட்டு தங்கி உள்ளனர். இந்த நிலையில் 19 ஆம் தேதியான நிலையில் அவர்கள் அறையை காலி செய்யாததால் இது குறித்து கேட்க இன்று யாத்ரி நிவாஸ் பராமரிப்பாளர்கள் அந்த அறையின் அருகே சென்றபோது துர்நாற்றம் வீசி உள்ளது. உடனே அருகில் இருப்பவர்களை அழைத்து கதவை உடைத்து பார்த்த பொழுது சாமிநாதன் உள்ளிட்ட நான்கு பேரும் இறந்த நிலையில் இருந்துள்ளனர்.

இது குறித்து ஸ்ரீரங்கம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டனர்.

ஸ்ரீரங்கம் போலீசார் இது குறித்து விசாரணை செய்ததில் பவானி(42), ஜீவா(37) இருவரும் மன வளர்ச்சி குன்றியவர்கள் இந்த நிலையில் தங்களுக்கு வயது மூப்பு ஆகிய நிலையில் தங்களுக்கு பின்னால் தங்கள் குழந்தைகளை யார் பார்த்துக் கொள்வார்கள் என்கிற விரக்தியில் தற்கொலை செய்து கொள்வதாக கடிதம் எழுதி வைத்துவிட்டு விஷமருந்தி நான்கு பேரும் உயிரிழந்தது தெரியவந்துள்ளது.

நான்கு பேரின் உடல்களை மீட்டு போலீசார் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## நூறாண்டுகள் பழமையான கட்சி :

# சட்டமன்ற தேர்தலில் 40 தொகுதிகளை கேட்க எங்களுக்கு உரிமை உண்டு

## திருச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பேட்டி

திருச்சி டிச 21

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று திருச்சி உறையூர் சாலை ரோட்டில் உள்ளி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன், மாநிலத்துணைச்செயலாளர்கள் ரவி, பெரியசாமி மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள், திருச்சி மாவட்ட செயலாளர் சிவா, மாநில நிர்வாகி செல்வராஜ், கவுன்சிலர் சுரேஷ் மற்றும் அனைத்து மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக மாநில செயலாளர் வீரபாண்டியன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

100 நாள் வேலை திட்டத்தின் பெயரை மாற்றக்கூடாது அந்தத் திட்டத்தின் பொருள் ஏழைகளுக்கு வாழ்வு தருவது, அதன் மீது மத்திய அரசு தாக்குதல் தொடுக்க கூடாது.

100 நாள் வேலை திட்டத்தில் வேலை நாட்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் அதற்குரிய நிதியை ஒதுக்க வேண்டும் அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் அதிகரிக்க வேண்டும்.

விஜய் திமுக தீய சக்தி என்று பலமுறை கூறுகிறார் அதை கூட்டணி கட்சி என்கிற முறையில் ஒரு பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சி என்கின்ற முறையிலும் அதை நாங்கள் நிராகரிக்கிறோம்.

ஜாதியாக நாட்டைப் பிளவு படுத்துகிற சக்தி தான் தீய சக்தி, மதமாக யார் பிளவுபடுத்துகிறார்களோ அவர்கள் கட்சி தான் தீய சக்தி, மக்களின் வள வாழ்வை கேள்விக்குறியாக்குகின்ற கருத்தியல் சித்தாந்தங்கள் கொண்டவர்கள் தான் தீய சக்தி எனவே அந்த வகையில் அவர்களை தீய சக்தி என்று சொல்வதற்கு மாறாக ஜனநாயக சக்தியான திமுகவை தீய சக்தி என்று சொல்வதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிக்கிறது.

விஜயிடம் திட்டங்கள் கொள்கைகளை எதிர்பார்த்தோம், புதிய சிந்தனைகளை எதிர்பார்த்தோம், ஆனால் ஏமாற்றம் அளிக்கிறது.

வருகிற 5 ந் தேதி காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் என மத்திய அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் ரெயில் நிலையங்கள் முன்பு மறியல் போர் நடக்கிறது. அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது.

வருகிற 26ந் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு மற்றும் நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

பிப்ரவரி 7ந்தேதி மாநில அளவிலான நூற்றாண்டு நிறைவு வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற உள்ளது அதில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளார். .தேர்தல் என்று வந்து விட்டால் பெரிய கட்சியோ சின்ன கட்சியோ அனைவருமே களத்தில் இருப்பவர்கள் தான். நாடாளுமன்றத்தில் எங்களுக்கு எண்ணிக்கை இல்லாததால் நாங்கள் சிறிய கட்சி ஆனால் கொள்கை அளவில் எங்களை கடந்து சென்றுவிட முடியுமா?

நாங்கள் இப்போது திமுகவை ஆதரிக்கவில்லை உறுதியாக கூட்டணியில் உள்ளோம், இது ஒரு கொள்கை கூட்டணி, எங்கள் கூட்டணி வலுவாக இருக்கிறது. எதைக் கண்டும் யாரைக் கண்டும் அச்சப்படத் தேவையில்லை தீய சக்தி என்று நீங்கள் திமுகவை சொல்லுகிற போது அணி சேர்ந்திருக்கிற எல்லோருக்குமே அதில் பங்கு இருப்பதாக அர்த்தம். நாங்கள் தூய சக்தி தூய சக்தி என்று சொல்லும் விஜய் நேற்று வரை செங்கோட்டையன் எந்த சக்தி . மிகவும் தூய்மையான சத்தியா அந்த சக்தி எனவே மாசுபட்டவர்கள் எல்லோரும் விஜய் அருகில் வருகிற போது தூய்மை அடைகிறார்களா. அதுபோல் ஒரு சக்தி இருந்தால் இந்தியாவிற்கு நல்லது.

எங்களைப் பொறுத்தவரை திமுக ஜனநாயகத்திற்காக குரல் எழுப்புகிறது, சட்டம் மற்றும் தமிழகத்தின் உரிமைக்காக குரல் எழுப்புகிறது. அதனால் திமுகவின் அருகில் இருந்து திமுகவை கொள்கை கூட்டணி என கூறுகிறோம்.

பிஜேபி தீய சக்தியா தூய சத்தியா எனக் கேட்டால் அது ஆபத்தான சக்தி

பொங்கல் தொகுப்பு பணம் கட்டாயம் தமிழக அரசு வழங்க வேண்டும். மக்கள் எவ்வளவு எதிர்பார்க்கிறார்களோ அதை தாராளமாக தமிழக அரசு தருவதற்கு முயற்சிக்க வேண்டும். நிதிநிலை அதற்கு ஒத்துழைக்குமானால் எவ்வளவு வேண்டுமானாலும் தரலாம் அதை நாங்கள் வரவேற்போம். தரக்கூடாது என கூற மாட்டோம்.

மத்திய அரசு தர வேண்டும். நிச்சயமாக இரட்டை இலக்கை காட்டிலும் இன்னும் இரட்டை இலக்கு 30 , 40 எனக் கேட்பதற்குரிய அரசியல் தார்மீகம் எங்களுக்கு உண்டு. 100 ஆண்டுகால அரசியல் எங்களுது. சட்டமன்றத்தில் இரண்டு பேர் நாடாளுமன்றத்தில் இரண்டு பேர் என்பதால் நாங்கள் சிறிய கட்சி அல்ல நாடு முழுவதும் எங்களது அமைப்பு உள்ளது. நாங்கள் எத்தனை சீட்டு வேண்டுமானாலும் கேட்பதற்கு எங்களுக்கு அரசியல் தார்மீகம் உள்ளது அவ்வாறு கேட்டாலும் ஜனநாயக விரோதமாக எங்களது கூட்டணி தலைவர் எடுத்துக் கொள்ள மாட்டார். சூழலுக்கு ஏற்றவாறு நாங்கள் கேட்போம். நாங்கள் வெல்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 3.67 கோடி ரூபாயில் புதிய உயர்மட்ட மேம்பாலம் பணியை துவக்கி வைத்தார் செஞ்சி மஸ்தான் எம் .எல்.ஏ



செஞ்சி, டிச 21

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் கீழ் மாம்பட்டில் இருந்து, ஈச்சூர் வழியாக ரெட்டனை செல்லும் தரைப்பாலத்தை உயர் மட்டம் மேம்பாலமாக கட்ட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதை ஏற்று, ரூ.3.67 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டு, புதிய உயர் மட்ட மேம்பாலம் அமைப்பதற்கான பூமி பூஜை, மேல் சேவூர் ஊராட்சி ஈச்சூரில் நடைபெற்றது. வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார். செஞ்சி மஸ்தான் எம். எல். ஏ., கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார்.

இதில், முன்னாள் எம்.எல்.ஏ., டாக்டர் மாசிலாமணி, தலைமைதீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை, நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்ட பொறியாளர் தியாகராஜன், உதவி பொறியாளர்கள் பாஸ்கர், ராமு, சேகர், ஒன்றிய கவுன்சிலர்கள் கம்சலா மாரி முத்து, ரேணுகா வேலாயுதம், விஜயா கண்ணன், கலைவாணி கிருஷ்ண மூர்த்தி, பத்மநாபன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜகோபால், சரஸ்வதி கள்ளன், சத்தியமூர்த்தி, துணைத் தலைவர் பரிதா அன்வர், ஊராட்சி நிர்வாகிகள் பாஸ்கர், சுப்பிரமணி, தனபால், கோவிந்தசாமி, அன்பு, பிரபு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் கள்ளக்குறிச்சி மாவட்டகுழு சார்பில் காத்திருப்பு இயக்கம்.




கள்ளக்குறிச்சி டிச 21

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பாக தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தலுக்கு முன் TNPSC தேர்வின் மூலம் 1 லட்சம் காலிபணியிடத்தை நிரப்பிட வலியுறுத்தி கள்ளக்குறிச்சியில் மாவட்ட துணை தலைவர் கா.சக்கரவர்த்தி தலைமையில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தை துவக்கி வைத்து TNGEA மாநில துணை பொதுச்செயலாளர் கே.மகாலிங்கம் பேசினார்.

இதில் DYFI மாவட்ட செயலாளர் மு.சிவக்குமார், STFI அ.பொ. உறுப்பினர் கு.சுதா, AIDWAமாவட்ட செயலாளர் ந.தனலட்சுமி, SFI மாவட்ட செயலாளர் வே. பிரகாஷ்காரத், DYFI மாவட்ட துணை தலைவர் மு.ஹரிகிருஷ்ணன், ஆறு. பகத்சிங்,

ஞிசீதிமி மா.செயற்குழு உறுப்பினர் மொ.தீபன்ராஜ் மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள் டி.ரகு, டி.ராஜீகாந்தி வெ.சந்திரபோஸ், மு.சரத்குமார் கே.ஆறுமுகம், ஏ.ரிச்சர்ட்பிரபு, ப.சின்னராசு ஆகியோர் போராட்டத்தை விளக்கி பேசினார்கள்.

போராட்டைத்தை நிறைவு செய்து மாநில செயற்குழு உறுப்பினர் கோ. அரவிந்தசாமி பேசினார்.

# வேலூர் மாவட்டத்தில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர்கள் பட்டியலில் 2,15,025 என 19.76% வாக்காளர்கள் நீக்கம்.



வேலூர், டிச 21

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வேலூர் மாவட்டத்தில் 01.01.2026 தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு தீவிர திருத்தம் 2026 கடந்த 04.11.2025 அன்று தொடங்கப்பட்டு கணக் கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் மீண்டும் திரும்ப பெறப்பட்டு வேலூர் மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் அனைத்து வாக்காளர்களின் கணக்கெடுப்பு படிவங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியான வாக்காளர்கள் விவரங்கள் அடங்கிய வரைவு வாக்காளர் பட்டியலை வேலூர் மாவட்ட ஆட்சியர் வி.ஆர்.சுப்புலட்சுமி அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

வேலூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் (43) வேலூர் 198722, (40) காட்பாடி 215751, (44) அணைக்கட்டு 227645, (45) கீழ்வைத்தியணான்குப்பம் 2,07,382, (46) குடியாத்தம் 2,38,505 என மொத்தம் ஆண் வாக்காளர்கள் 5,28,619 பெண் வாக்காளர்கள் 5,59,236 மூன்றாம் பாலினத்தவர் 150 என 10,88,005 வாக்காளர்கள் உள்ளதாகவும் தற்போது ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் இறப்பு 48,305, நிரந்தர குடிப்பெயர்வு 71,719, இருமுறை பதிவு 10,055, கண்டறிய இயலாதவர்கள் 84,429 மற்றும் மற்றவை 517 என 2,15,025 நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் நடத்தும் அதிகாரியான மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

ஏற்கனவே மாவட்டத்தில் இருந்த 1314 வாக்குச்சாவடிகள் 1200 பேருக்கு ஒரு வாக்கு சாவடி என மறு சீரமைப்பு செய்யப்பட்டு அதில் 113 வாக்குச் சாவடிகள் புதிதாக உருவாக்கப்பட்டு தற்போது 1427 வாக்குச் சாவடிகள் வரைவு வாக்காளர் பட்டியலில் வெளியிடப்பட்டுள்ளது.



திருச்சிராப்பள்ளி மாவட்டம் தொட்டியம் வட்டம், கொளக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் பல்துறை உயர் சிறப்பு மருத்துவ முகாமின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# மாம்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் ஊஞ்சல் தாலாட்டு வைபவம்...!



வந்தவாசி, டிச 21:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மாம்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் அமாவாசை ஊஞ்சல் தாலாட்டு வைபவம் மற்றும் சிறப்பு பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. மூல மூர்த்தி அம்மனுக்கு வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. பிறகு அருட்சக்தி ஆறு. லட்சுமணன் ஸ்வாமிகள் மேற்பார்வையில் யாக சாலைபூஜை நடந்தேறியது . இரவு உற்சவ மூர்த்தி அம்மனுக்கு ஊஞ்சல் தாலாட்டு வைபவம் நடைபெற்று மேளதாளத்துடன் கோயில் பிரகாரத்தில் பவனி வந்தனர். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# விழுப்புரம் மாவட்டம் பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் மார்கழி மாத அமாவாசை முன்னிட்டு ஊஞ்சல் உற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்

விழுப்புரம், டிச. 21–

விழுப்புரம் மாவட்டம் உலக பிரசித்தி பெற்ற மேல் மலையனூர் அங்காளம்மன் கோவிலில் மார்கழி மாத அமாவாசையை முன்னிட்டு ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

மார்கழி மாத அமாவாசை முன்னிட்டு அதிகாலை முதலே நடை திறக்கப்பட்டு மூலவர் மற்றும் உற்சவர் அங்காளம்மனுக்கு பால் தயிர் பன்னீர் சந்தனம் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டது.

அதன் பின் வண்ண மலர்கள் , தங்க கவச அலங்காரம் செய்து

சர்க்கரை பொங்கல், சுண்டல் பல்வேறு வகையான பழங்களை கொண்டு நெய்வேத்தியமும் அதனைத் தொடர்ந்து தீபாராதனையும் நடைபெற்றது.



அதன்பின் நீண்ட நெடு வரிசையில் காத்துக் கொண்டிருந்த பக்தர்கள் சாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

உற்சவர் அங்காளம்மன் தில்லை காளியம்மன் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

நாள் முழுவதும் திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வந்திருந்த நிலையில் இரவு பதினோரு மணிக்கு மேல் பூசாரிகள் வழக்கப்படி உற்சவர் அங்காளம்மன் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சல் மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்டு பூசாரிகள் வழக்கப்படி தாலாட்டு பாடி தீபாரதனை எடுத்து ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

நாள் முழுவதும் விரதம் இருந்து ஊஞ்சல் உற்சவம் காண வேண்டி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கையில் தீபம் ஏந்தி ஓம் சக்தி அங்காளம்மா என்ற கோஷத்துடன் அங்காளம்மனை தரிசனம் செய்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோவில் நிர்வாகம் சார்பில் கூட்ட நெரிசலை தவிர்க்க தடுப்பணைகள் மற்றும் விழப்புரம் மாவட்ட கண்காணிப்பாளர் சரவணன் தலைமையில் 600 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

கழிப்பறை , குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இதில் கோவில் உதவி ஆணையர் சக்திவேல் மற்றும் அறங்காவலர் குழு தலைவர் சேட்டு என்கிற ஏழுமலை பூசாரி மற்றும் பிற அறங்காவலர்கள் ஊஞ்சல் உற்சவத்தில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 10.76 லட்சம் வாக்காளர்கள்: 84,329 பேர் நீக்கம்



கள்ளக்குறிச்சி டிச 21

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 4 சட்டப்பேரவைத் தொகுதிகளின் சிறப்புத் தீவிரத் திருத்தம் 2026 வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் வெளியிட்டார்.

இதில் மொத்தம் 10.76 லட்சம் வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர். 84,329 பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்த ஆட்சியர் கூறியது:

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின் படி வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் நவ. 4இல் தொடங்கின. இப்பணிகளுக்கான கடைசி நாள் டிச.4 ஆம் தேதி அறிவிக்கப்பட்டு, பின்னர் காலக்கெடு நீட்டிக்கப்பட்டு டிச.14ஆம் தேதி நிறைவுபெற்றது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி என 4 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இந்த தொகுதிகளில் நவ.4 ஆம் தேதி தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட அறிவுரையின் அடிப்படையில் மாவட்டத்திலுள்ள 11,60,607 வாக்காளர்களுக்கு தனித்துவமான கணக்கீட்டு படிவம் இரு நகல்களாக அச்சிடப்பட்டு, அனைத்து வாக்காளர்களுக்கும் வீடு, வீடாகச் சென்று 1,275 வாக்குச் சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்பட்டன.

வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்கள் திரும்ப பெற்று, ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, வாக்குச் சாவடி நிலை அலுவலர்களால் கைப்பேசி செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டது. 2025 அக்.27 ஆம் தேதி நிலவரப்படி மாவட்டத்தில் 11,60,607 இருந்தனர். வாக்காளர் தீவிர திருத்தப்பணியில் 84,329 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தற்போதைய நிலவரப்படி 5,36,627 ஆண்கள், 5,39,441 பெண்கள், 210 இதரர் என மொத்தமாக 10,76,278 வாக்காளர்கள் உள்ளனர்.

தொகுதி வாரியாக நீக்கப்பட்டவர்கள் விவரம்:

உளுந்தூர்பேட்டை தொகுதியில் இறப்பு 8,457, இடம் பெயர்ந்தவர்கள் 7,135, இருமுறைப் பதிவு 1,317, கண்டறிய முடியாத வாக்காளர்கள் 565 என மொத்தம் 17,474. ரிஷிவந்தியம் தொகுதியில் இறப்பு 8,650, இடம் பெயர்ந்தவர்கள் 9,780, இருமுறைப் பதிவு 1,643, கண்டறியமுடியாத வாக்காளர்கள் 244 என மொத்தம் 20,317. சங்கராபுரம் தொகுதியில் இறப்பு 9,375, இடம் பெயர்ந்தவர்கள் 12,115, இருமுறைப் பதிவு 1,483, கண்டறியமுடியாத வாக்காளர்கள் 1,242 என மொத்தம் 24,215. கள்ளக்குறிச்சி (தனி) தொகுதியில் இறப்பு 7,315, இடம் பெயர்ந்தவர்கள் 13,178, இருமுறைப் பதிவு 1,266, கண்டறியமுடியாத வாக்காளர்கள் 564 என மொத்தம் 22,323.

இதன் மூலம் மாவட்டத்தில் மொத்தம் இறப்பு 33,797, இடம் பெயர்ந்தவர்கள் 42,208, இருமுறைப் பதிவு 5,709, கண்டறியமுடியாத வாக்காளர்கள் 2,615 என மொத்தம் 84,329 வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தொகுதி எண், தொகுதியில் பெயர், மொத்த வாக்குச்சாவடி, ஆண்கள், பெண்கள், இதரர், மொத்தம், நீக்கப்பட்டவர்கள் விவரம்:

077உளுந்தூர்பேட்டை : 337 1,44,380 1,42,987 46 2,87,413 17,474

078ரிஷிவந்தியம்: 305 1,31,734 1,30,780 50 2,62,564 20,317

079சங்கராபுரம்: 300 1,26,899 1,29,216 46 2,56,161 24,215

080கள்ளக்குறிச்சி (தனி): 330 1,33,614 1,36,458 68 2,70,140 22,323

மொத்த ஆண் வாக்காளர்கள் 5,36,627, மொத்த பெண் வாக்காளர்கள் 5,39,441, மொத்த இதரர் வாக்காளர்கள் 210, மொத்த வாக்காளர்கள் 10,76,278.

விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்: தற்போது வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள் (இடம்பெயர்ந்தவர்கள் கண்டறியப்படாதவர்கள் இருமுறை பதிவு பெற்றவர்கள் இறந்தவர்கள்) குறித்த பட்டியல், அனைத்து வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களிலும் பார்வையிடலாம்.

வாக்காளர்கள், வரைவு வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் இடம்பெயர்ந்துள்ள விவரம் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்திலும் கைப்பேசி செயலியிலும் காணலாம். மேலும், நீக்கம் செய்யப்பட்ட வாக்காளர்களின் விவரம் இணையதளத்திலும் காணலாம். மேற்குறிபிட்ட அலுவலகங்களிலும் நேரில் பார்வையிடலாம்.

மேற்படி வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத வாக்காளர்கள் படிவம் 6 உடன் உறுதிமொழி படிவம் மற்றும் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது பரிசீலனை செய்து அவர்களது பெயர் சேர்க்கப்படும்.

மேலும், 2026 ஜன1இல் 18 வயது பூர்த்தியடையும் முதல்முறை வாக்காளர்கள் படிவம் 6 உடன் உறுதிமொழி படிவம் மற்றும் உரிய ஆவணங்களுடன் விண்ணபித்து தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம். கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெறுதல் டிச.19 முதல் 2026 ஜன18 ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்குதல் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகளை, சம்மந்தப்பட்ட சட்டப்பேரவைத் தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலர் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட வாக்கு சாவடி மையங்களில் உள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் நேரில் வழங்கலாம்.

மேலும் இணையதளத்திலும் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகள் விண்ணப்பிக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச் சாவடி முகவர்கள் (பிஎல்ஏ 2), ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 10 விண்ணப்பப் படிவங்களை (கோரிக்கை அல்லது ஆட்சேபணை) சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவர். கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபணைகள் தொடர்பாக பெறப்படும் அனைத்து மனுக்கள் மீது டிச19 முதல் 2026 பிப்.10 ஆம் தேதி வரை விசாரணை மேற்கொண்டு இறுதி வாக்காளர் பட்டியல் 2026 பிப்17இல் வெளியிடப்படும் எனத் தெரிவித்தார்.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, வாக்காளர் பதிவு அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், தேர்தல் வட்டாட்சியர் பரந்தாமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம், அத்தாணி, விஷ்வேஸ்வரய்யா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நடத்தி, ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். உடன் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம் உட்பட பலர் உள்ளனர்.

# தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியில் காமராஜர் மக்கள் கட்சி இணைப்பு... ஈரோடு தனியார் மண்டபத்தில் இணைப்பு விழா கோலாகலம்...






ஈரோடு. டிச. 21

ஈரோட்டில் நடைபெற்ற விழாவில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் காமராஜர் மக்கள் கட்சி இணைந்தது. இதற்கான இணைப்பு விழா நேற்று ஈரோட்டில் உள்ள தனியார் மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து வந்த ஜிகே மூப்பனார் தமிழ் மாநில காங்கிரஸ் என்ற கட்சியை துவக்கி நடத்தி வந்தார்.

அவரது மறைவுக்குப் பின்னர் அவரது மகன் ஜி கே வாசன் அந்த கட்சியை தற்போது வழி நடத்தி வருகிறார். ஜி கே வாசன் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி அதிமுக மற்றும் பாஜக கட்சிகள் அமைத்துள்ள கூட்டணியில் தற்போது அங்கம் வகித்து வருகிறது.

இதன் நிலையில் காமராஜர் மக்கள் கட்சி எந்த கட்சியை நிறுவி நடத்தி வந்த தமிழருவி மணியன் தனது கட்சியை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் இணைக்க திட்டமிட்டு அதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இரு கட்சிகளும் இணையும் விழா ஈரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபம் ஒன்றில் நேற்று நடைபெற்றது.

இரு கட்சிகளின் இணைப்பு விழாவிற்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி கே வாசன் மற்றும் காமராஜர் மக்கள் கட்சி தலைவர் தமிழருவி மணியன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

இணைப்பு குறித்தும் இனி இணைந்து பணியாற்றுவது குறித்தும் இரு தலைவர்களும் இழப்பு விழாவிற்கு வந்திருந்த இரு கட்சி தொண்டர்கள் மத்தியில் பேசினர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விடியல் சேகர், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில இளைஞரணி தலைவர் பி. யுவராஜ் உள்பட இரண்டு கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இணைப்பு விழாவில் திரளாக கலந்து கொண்டனர்.

# மணப்பாறை காமராஜர் சிலை ரவுண்டானவை மையபடுத்தி சென்டர் மீடியம் அமைக்க தமிழக அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை



மணப்பாறை டிச 21

மணப்பாறை கோவில் பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவகத்தில் இயங்கும் ஆர்.வி.பி. மன்றத்தில் நகரகுழு கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டத்திற்கு அருள் ஆரோக்கியம் தலைமை வகித்தார் நகர செயலாளர் தங்கராசு துணைச் செயலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர் சி.பி.ஐ மாநில நிர்வாககுழு முன்னல் உறுப்பினர் இந்திரஜித் அரசியல் உரை நிகழ்தினார்

மணப்பாறை நகரம் தமிழகத்தின் இருக்கும் அணைத்து மாவட்டத் திற்கும் செல்ல மையபகுதி வடக்கு தெற்கு மாவட்டங்களுக்கு கிழக்கு மேற்கு மாவட்டங்களுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட போருந்துகள் இயங்கிய நகரத்தில் போக்குவத்துக்கு சாலை வசதிகள் குறைவாய் போனதால் வடக்கு தெற்கு மாவட்டங்களுக்கு இயங்கிய போருந்துகள் தற்போது விரலிமலை வழியாக செல்கிறது

மேற்கு பகுதி பேருந்துகள் ஒன் டூ ஒன் என்று நகரத்துக்குள் வரமல் செல்கின்றன. கிழக்கு பகுதி பேருந்துகள் நகரத்துக்குள் வந்துதான் செல்ல வேண்டும் என்ற நிலை நீடிக்கிறது இன் நிலையில் வட தென் மாவட்டங்களுக்கு செல்லும் கனரக வாகனங்கள் ஆயிர கணக்கில் பயணித்து வருகின்றது இதனால் நகரத்தின் எல்லையில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு

சில நிமிடத்தில் கடக்கவேண்டிய இடத்திற்கு குறைந்தது பத்து நிமிடங்களுக்கும் மேல் ஊர்ந்து செல்லும் நெருகடி நிறைந்த சாலையகா உள்ளது

தமிழக அரசு நெடுஞ் சாலை துறை மணப்பாறை நகரில் உள்ள புதுக் கோட்டை சாலையில் இருந்து காமராஜர் சிலை வரை சென்டர் மீடியம் அமைத்தும் காமராஜர் சிலை ரவுண்டானவில் இருந்து பிரியும் விராலிமலை சாலை, கோவில்பட்டி சாலை பகுதிகளின் நகரத்தின் எல்லை வரை சென்டர் மீடியம் மற்றும் மீன் விலக்குகள் அமைக்கத்து போக்குவரத்து நெருக்கடியை தவிற்க்க வேண்டும் இந்த சென்டர் மீடியம் காமராஜர் சிலை ரவுண்டனவை மையபடுத்தி அமைக்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன முன்னல் நகர செயலாளர்

ஜனசக்தி உசேன் நகர்மன்ற உறுப்பினர் மனோன்மணி கவிதா ரேணுகா முரளி ராஜா ஆரிப் செல்வம் உட்பட நகரகுழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்

தமிழகம் முழுவதும் செய்திகள் மற்றும் விளம்பரங்கள் சேகரிக்க நல்ல துடிப்பான செய்தியாளர்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

தொடர்புக்கு

78100 - 68421,

94884 - 20449

# உளுந்தூர்பேட்டையில் அம்பேத்கர் சிலையுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்: பகுஜன் சமாஜ் கட்சியினர் கோரிக்கை.

உளுந்தூர்பேட்டை டிச 21

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின்



முழு உருவ வெங்கல சிலையை உளுந்தூர்பேட்டை பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு தமிழக முதல்வர் அவர்களால் வருகின்ற 27/12/25 அன்று அடிக்கல் நாட்ட உள்ளார். ஆகவே புதியதாக அமைய உள்ள பேருந்து நிலையத்தில் அம்பேத்கர் அவர்களின் முழு உருவ சிலையுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என பகுஜன் சமாஜ் கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சிவபெருமான் மற்றும் மாவட்ட தலைவர் பொன்னரங்கம் ஆகியோர்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தனலட்சுமி அவர்களிடம் மனு அளித்தனர். மேலும் இதனைத் தொடர்ந்து விரைவில் பொதுமக்களிடம் கையெழுத்து இயக்கம் பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்சி கோட்டை பகுதியில் லாட்டரி சீட்டுகள் விற்றவர் கைது செல்போன் பறிமுதல்

திருச்சி டிச. 21

திருச்சி ராமகிருஷ்ணா பாலம் பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகள் விற்கப்படுவதாக கோட்டை போலீசாருக்கு தகவல் வந்தது.இதையடுத்து கோட்டை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் குமாரவேல் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் ரோந்து சென்று, தீவிரமாக கண்காணித்தனர். அப்போது லாட்டரி சீட்டுகள் விற்றதாக தென்னூர் சின்னசாமி நகரை சேர்ந்த ஸ்ரீதர் (வயது 52). என்பவரை கைது செய்தனர். அவரிடம் இருந்து செல்போன், மற்றும் லாட்டரி சீட்டுகள் விற்றதற்கான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

# தொழிற்போட்டியில் வியாபாரி கொலை திண்டுக்கல், தேனி வாலிபர்கள் 5 பேருக்கு 10 ஆண்டு சிறை

வடமதுரை, டிச.21

மதுரை மாவட்டம் கீழதோப்பு பகுதியைச் சேர்ந்த ஜெகதீஷ் பாண்டி. இவரும் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் காசா நகர் பகுதியை சேர்ந்த அரவிந்த், அவரது தம்பி விஜயபாண்டி ஆகியோர் சேர்ந்து வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் இடைத்தரகர்களாக வேலை பார்த்து வந்தனர்.

இந்நிலையில் தொழில் போட்டி காரணமாக அவர்களுக்கிடையே முன்விரோதம் ஏற்பட்டது. இவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை பேசி தீர்ப்பதற்காக கடந்த 9.11.2019 அன்று திருச்சிக்கு காரில் அழைத்து வந்தனர். மணப்பாறை அடுத்த ஆண்டவர் கோவில்

பகுதியில் அரவிந்த் மற்றும் அவருடைய நண்பர்கள் ஜெகதீஷ் பாண்டியன் காரை மறித்து ஜெகதீஷ் பாண்டியனை சரமாரியாக வெட்டி சாய்த்தனர். இதில் சம்பவ இடத்திலேயே ஜெகதீஷ் பாண்டியன் உயிரிழந்தார். அவருடன் வந்த அவரது அண்ணன் சசிகுமார் வெட்டுக்காயங்களுடன் உயிர் தப்பினார்.

இதுகுறித்து மணப்பாறை போலீசார் 14 பேர் பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். இந்த வழக்கு திருச்சி மாவட்டம் 2வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. இந்த கொலை வழக்கில் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரைச் சேர்ந்த அங்குசாமி மகன் அரவிந்த்

(வயது 31), திண்டுக்கல் பேகம்பூரை சேர்ந்த நாகசாமி மகன் முத்துவேல் (34), திருச்சி எடமலைப்பட்டி புதூரை ராமச்சந்திரா பகுதியைச் சேர்ந்த ஜாகிர் உசேன் மகன் பாதுஷா (37), திருச்சி கருமண்டபம் சக்தி நகரை சேர்ந்த கலியமூர்த்தி மகன் ஆனந்த் (45), தேனி பெரிய பள்ளிவாசல் தெருவை சேர்ந்த பெரியசாமி மகன் மதன் குமார் (31) ஆகியோர் குற்றவாளிகள் என நீதிபதி கோபிநாத் தீர்ப்பளித்துள்ளார். முதல் எதிரிக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதமும், மற்ற 4 பேர்களுக்கும் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம். விதித்து தீர்ப்பளித்தார்.

இதனை அடுத்து அவர்கள் 5 பேரும் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421